உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

லர் 25] பராபவ ஆண்டு புரட்டாசித்திங்கள் 10—10—66 [இதழ் 11

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி

உ
குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25 | 10-10-66 | இதழ் 11

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

ஏதேது செய்தாலும்
ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித்
திருந்தாலும் — மாதேவா
நின்செயலே என்று
நினதருளா லேஉணரின்
என்செயலே காண்கிலே
னே. (45)

ஆசிரியர் :-

வித்துவான்.

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்.

உட்பொருள்

எண்		பக்கம்
1	யானை உரித்த பிரான் ...	473
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ..	479
3	சித்தாந்த வினாவிடை ...	485
4	புராணம்	489
5	'அமுதிற்குத் தமிழென்று பேர்' ...	492
6	கோபூஜா விதி ...	498
7	தையல்நாயகி அந்தாதி	501
8	சிவஞான முனிவரின் இலக்கணக்கொள்கைகள்	505
9	ஆளுடையபிள்ளையார் ...	510
10	வேளூர் இலவச சித்த வைத்தியசாலை ...	515
11	ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கட்கு வரவேற்பு ...	522
12	செய்திகள் ...	532
13	எதிர்காலம் ...	534

அட்டைப்பட விளக்கம்

தருமையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு 15—10—66 சனிக்கிழமை முதல் நவராத்திரி விழா நடைபெறும்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 25] பராபவ - புரட்டாசி - 10—10—66 [இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

யானை உரித்த பிரான்

இறைவன் உயிர்களின்பொருட்டுக் கொள்ளுகின்ற வடிவங்கள், 'போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம் என்னும் மூன்று வகைகளில் அமையும், போகவடிவம் உயிர்களுக்கு உலக இன்பத்தைக் கொடுக்கும். யோக வடிவம் வீட்டின்பத்தைக் கொடுக்கும். வேகவடிவம் இவ் விரண்டிற்கும் தடையாய் உள்ள வினைகளைப் போக்கும்.

" போகியாய் இருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார் ;
யோகியாய் யோக முத்தி உதவுத லதுவும் ஓரார் ;

வேகியா னுற்போல் செய்த வினையினை வீட்டல் ஓரார் ;
ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பர். "

(*சிவஞான சித்தி. சூ.* **1. 50.**)

போகவடிவம் முதலிய மூன்றனுள் வேகவடிவம், அச்சத்தை விளைவிப்பதாய் இருக்கும். இதனை, 'உக்கிர வடிவம்', எனவும், 'கோர வடிவம்' எனவும் கூறுதல் உண்டு. இஃது அச்சத்தைத் தருவதாயினும், இதனை வழிபடின் இடுக்கண் பலவும் நீங்கும். சிறப்பாகப் பகைவரால் நலிவுறுவோர் இறைவனது வேகவடிவத்தை வழிபடின், அந்நலிவினின்றும் நீங்குவர்.

இறைவனது உக்கிர வடிவங்களில் யானை உரித்த திருவடிவம் ஒன்று. இஃது உமையம்மைக்கே அச்சத்தை விளைவித்தது என்பர்

" உரித்திட்டார் ஆனை யின்தோல்
உதிர ஆ றொழுகி ஓட
விரித்திட்டார் உமையாள் அஞ்சி
விரல்விதிர்த் தலக்கண் நோக்கித்
தரித்திட்டார் சிறிது போது
தரிக்கில ராகித் தாமும்
சிரித்திட்டார் எயிறு தோன்றத்
திருப்பயற் றூர னாரே "

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். விலங்குகளில் யானையின் தோல் உரித்தற்கியலாதது. இறைவன் அதனை உரித்ததனோடு போர்வையாகவும் போர்த்துக் கொண்டனன் என்பது அவனது அருந்திறலையே குறிக்கின்றது.

" மத்த யானைமறு கவ்வுரி போர்த்ததோர்
மாயம் மிதுவென்ன "

என்கின்றார் ஞானசம்பந்தர்.

" ஏனக்கொம் பும்இள ஆமையும்
பூண்டங்கோர் ஏறும் ஏறிக்
கானக்காட் டில்தொண்டர் கண்டன
சொல்லியும் காமுறவே

மானைத்தோல் ஒன்றை உடுத்துப்
புலித்தோல் பியற்கும் இட்டு
யானைத்தோல் போர்ப்ப தறிந்தோமேல்
நாம்இவர்க் காட்ப டோமே''

என்று இத் திருவடிவத்தின் இன்பத்தில் திளைத்துப் பாடுகின்றார் ஆளுடைய நம்பிகள்.

பாவத்தை. 'கருமைநிறம் உடையது' என்றல் வழக்கு. யானை கருமைநிறம் உடையதாதல் வெளிப்படை. எனவே, 'சிவபெருமான் யானையை உரித்தார்' என்றால், 'பாவத்தை ஒழித்தார் என்பதுதான்' பொருள். இன்னும் அசுரர்களை, 'கருமைநிறம் உடையவர்கள்' என்று கூறுவதற்கும், 'பாவமே உருவானவர்கள்' என்பதுதான் பொருள். சிவபெருமான் உரித்த யானை, உலகில் நாம் காணும் யானை போன்றது அன்று; 'கயாசுரன்' என்னும் ஓர் அசுரனாகிய யானையேயாம். எனவே, யானையை உரித்த இந்நிலை, சிவபிரான் உலகில் உள்ள பாவங்களைப் போக்குதலையே குறிக்கும். உலகில் உள்ள பாவங்களை மட்டுமன்று; அந்த அசுரனது பாவத்தையும் போக்கிய செயலே இது. சிவபெருமானால் ஒறுக்கப்பட்டவர்கள், அவ்வொறுப்பினால், பாவத்தின் நீங்கி நலத்தையே பெறுவர். அதனால், அப்பெருமானது உக்கிர வடிவமும் அருள் வடிவமே யன்றி வேறன்று. இதனை,

'' ஒன்றொடொன் றெவ்வா வேடம்
ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலகம் நீங்கி
நின்றனன் என்றும் ஓரார்;
அன்றியவ் வேட மெல்லாம்
அருள்புரி தொழில்என் றோரார்;
கொன்றது வினையைக் கொன்று
நின்றஅக் குணம்என் றோரார்''

என விளக்குகின்றது சிவஞானசித்தி.(சூ.1.51.) இதுபற்றியே, ஆளுடைய அடிகளும், 'சிவபிரான் தக்கன் யாகத்திற் சென்றிருந்த தேவர்கள் பலரை, இரக்கமின்றிப் பலவாறாக ஒறுத்தது என்னையோ' என்னும் வினாவிற்கு விடையாக,

" அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடி
நயனங்கள் மூன்றுடை நாயகனே தண்டித்தாற்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ "

என்று அருளிச் செய்வதைக் காண்கின்றோம். யானையாய் இருந்த அசுரனது தோல் உரிக்கப்பட்டது, அவன் தனது பாவத்தினின்றும் நீங்கினமையைக் காட்டுகின்றது. எனவே, சிவபெருமானது வேகவடிவங்கள் உயிர்களின் வினைகளை ஒழித்து அவைகளைத் தூயனவாகச் செய்தல் பெறப்படுகின்றது. உரிக்கப்பட்ட தோலைச் சிவபிரான் புறத்தே எறியாது மேலே போர்த்துக்கொண்டது, பாவத்திற்கும் இடம் அவரையன்றி இல்லை என்பதையே தெரிவிக்கும். ஞானசம்பந்தர் சிவபெருமானை நோக்கி,

" குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய் "

என்று, 'குற்றமாய் இருப்பவனும் நீயே' என்று அருளிச் செய்கின்றார்.

சிவபெருமானுடைய வடிவம் பேரொளியை யுடையது; ஆதலின், அதனை நேரே நோக்கும் ஆற்றல் பொதுநிலையில் உள்ளவர்கட்கு இல்லை. யானைத்தோற் போர்வை அவ்வொளியை மறைத்தமையால், அவரை அப்போர்வை வடிவத்தில் காணும் ஆற்றலைப் பலரும் பெறுவர். புண்ணியத்தின் வழியே பெறப்படும் இறைவன் திருவருள், 'அறக்கருணை' என்றும், பாவத்தின் வழியே பெறப்படும் இறைவன் திருவருள், 'மறக்கருணை' என்றும் சொல்லப்படும். எனவே, அறக்கருணையின்வழி அவனைநோக்கும் நிலையில்லாதவர்கள் மறக்கருணையின்வழி அவனை நோக்கிப் பின்னர் அவனது அறக்கருணைக்கு உரியராவர் என்பது இதனால் அறியப்படும். இந்நிலைக்கு, இயமன் இறைவனால் திருவடி சூட்டப்பெற்ற வகையை ஆசிரியன்மார் எடுத்துக்காட்டுவர்.

" போற்றி என்றும் புகழ்ந்தும் புரண்டும்நின்
றேற்றல் மிக்கஅன் பால்அழைக் கின்றிலேன்

ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்றம் அன்னதோர் கொள்கைஎன் கொள்கையே''

(திருவாசகம்)

'' மேலும் அறிந்திலன் நான்முகன் மேற்சென்று: கீழ்இடந்து
மாலும் அறிந்திலன் மால்உற்றதே, வழிபாடு செய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக்
காலன் அறிந்தான் அறிதற் கரியான் கழலடியே'' (தேவாரம்)

என வருவனவற்றைக் காண்க. சிவபிரான் யானையுரித்த வரலாறு புராணங்களில் பின்வருமாறு கூறப்படுகின்றது.

யானை உருவங்கொண்டு உலகத்தை வெல்லத் தொடங்கினமையால், 'கயாசுரன்' எனப் பெயர் பெற்ற அசுரன் மகாமேருமலையை அடைந்து பிரமதேவனை நோக்கி அரிய தவத்தைச் செய்தான். அதனால், அவன்முன் பிரமதேவன் தோன்றி, 'நீ வேண்டுவது யாது ?' என்று வினவ, அசுரன், 'அழியாத ஆயுளும், சிறந்த உடல்வலியும், யாரிடத்திலும் தோற்காத வெற்றியும வேண்டும்' என வேண்டினான். பிரமதேவன் நகைதது, 'அங்ஙனமே அளித்தோம்; ஆனால், சிவபெருமானிடம் நீ செல்லலாகாது; சென்றால் இவ்வரங்கள் அழிந்துவிடும்' என்று கூறிச் சென்றான் கயாசுரன் மிக்க மகிழ்ச்சியுற்றுத் திரும்பி, இந்திரன் முதலிய தேவர்களையும், மக்களையும்மட்டுமன்று; அசுரர்களையும் வென்று தருக்குக் கொண்டான். அவன் காசிக்குச் சென்றபொழுது, அங்கிருந்த முனிவர்கள் அசுரனது வருகையைக் கண்டு நடுங்கி, அங்குள்ள மக்களுடன் மணிகன்னிகையில் உள்ள விசுவநாதர் ஆலயத்துட் புகுந்து, 'அடைக்கலம்' என்று சொல்லித் துதித்தார்கள்.

அதைக்கண்ட கயாசுரன் அங்கும் சென்றான் திருக்கோயிலின் உள்ளே இருந்த அனைவரும் இலிங்கமூர்த்தத்தைப் பற்றிக்கொண்டு கூக்குரலிட்டனர். உடனே சிவபெருமான் தமது திருமேனியில் கோடி சூரியருக்குச் சமமான பேரொளி வீசும்படி உக்கிரராய்த் தோன்றி அசுரனை அதட்டினார். அசுரன், சிவபெருமான் எனத் தெரிந்தும், தனது

செருக்கினாலும், ஊழ் வலியினாலும் பிரமன் சொல்லியதை மறந்து அவரை எதிர்த்தான்.

சிவபெருமான் தமது ஒருபாதத்தைக், கயாசுரனாகிய அந்த யானையின் தலையிலும், மற்றொரு பாதத்தை அதன் துடையிலும் வைத்து மிதித்து, அதன் நான்கு கால்களும் இருபக்கங்களிலும் கிடக்க, தமது இருகைகளிலும் உள்ள நகத்தால் அதன் முதுகைக் கீறித் தோலை உரித்து அதனை அழித்துநின்றார். அவரது திருவுருவத்தின் ஒளிமிகுதியால் தேவர்களும், முனிவர்களும் அதனைக் காணமாட்டாது கண்களைப் பொத்திக்கொண்டனர். ஆகவே, அவர்கள் தம்மைக் காணும்படி, தாம் உரித்த அந்த யானைத் தோலைத் தமது திருமேனியை மறைக்கும் போர்வையாகப் போர்த்துநின்றார். அதன்பின் தேவர் முதலியோர் அவரைக் கண்டு பெரு முழக்கத்துடன் துதித்தனர். சிவபெருமான் தமது ஆலயத்துள் சென்று மறைந்தார்.

பின்பு தேவர் முதலிய யாவரும் கயாசுரனது உதிரம், எலும்பு, தசை முதலியன கிடத்தலைக் கண்டு, 'சிவபெருமானே கயாசுரனை அழித்தருளினார்' என்று அறிந்து ஆடிப் பாடிக் களித்து, விசுவேசுரருக்குச் சிறப்பாகப் பூசைசெய்து இன்புற்றனர்.

கரிய யானையின் தோலை உரித்துக் கயாசுரனால் உண்டாகிய துன்பத்தை நீக்கித் தமது திருமேனியை யாவரும் கண்டுகளிக்கும்படி அத்தோலைப் போர்த்துக்கொண்ட பேரருள் வடிவமாகிய இவ் யானை உரித்த திருவுருவத்தை வழிபட்டு, இடுக்கண் பலவும் நீங்கி இன்புறுவோமாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

இறைபணி

உனக்குப் பணிசெய்ய உன்றனை எந் நாளும்
நினைக்க வரம்எனக்கு நீதா—மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்பலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா,

—குருஞானசம்பந்தர்.

வருவது வந்தேதீரும்; வராதது எவ்வகையிலும் வாராது. அதுபோலவே, போவது போயேவிடும்; போகாதது எவ்வகையிலும் போகாது. இஃது எங்கும், என்றும் உள்ள உண்மை. ஆனால், இதை உணர்ந்து மக்கள் உள்ளம் அமைதியுற்றிருப்பதில்லை. வாராததை, 'வரவில்லையே' என்றும் நினைத்து, அவற்றை வருவிப்பதற்கும், போக்குவதற்கும் உரிய வழிகளைப் பலவாறாக எண்ணிஎண்ணித் துன்பப்படுவதே அவர்கள் இயல்பாய் உள்ளது.

" வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரம் தாம்நினைத்து
துஞ்சுவதே மாந்தர் தொழில் "

என்கிறார் ஔவையார்.

இன்னும், ஏதாவது ஒன்றை எண்ணி அதன் பொருட்டு முயன்று அதனை அடைந்துவிட்டாலும், அதனுடன் மக்கள் மனம் நிறைவுறுவதில்லை; அதற்கு மேலும் மற்றொன்று வேண்டும் என நினைத்து அதற்காகக் கவலையுறுவர் அது

கிடைத்து விட்டாலும், அதற்குமேலும் மற்றொன்றை அடைய விரும்புவர். எனவே, மக்களுடைய விருப்பத்திற்கு ஒரு முடிவே இல்லை என்பது தெரிகின்றது இவ்வாறு அளவற்ற ஆசையால் அவர்கள் அடையப்போவது என்ன? உண்பதும், உடுப்பதும்' உறங்குவதுந்தான். ஒவ்வொருவரும் எவ்வளவு உண்ண இயலும்? உடுக்க இயலும்? இவற்றிற்காக ஏன் இறக்கும் வரையில் இத்தனைக் கவலை என்று கேட்கும் குறிப்பிலே அமைந்த ஒரு பாடலையும் அவரே (ஔவையார்) கூறியுள்ளார்.

' உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம் ;
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். ''

திருவள்ளுவரும்,

'' ஒருபொழுதும் வாழ்வ தறியார் ; கருதுப
கோடியும் அல்ல பல ''

என்கின்றார்.

கவலையே உருவாய் வாழும் மக்கள் இக்கவலையினின்றும் நீங்கி அமைதியுற்று வாழ்வதற்கு வழிதான் என்ன என்று வினவினால், அதற்குரிய வழியையும் வள்ளுவரே கூறியுள்ளார் முதல் அதிகாரத்திலேயே கூறியுள்ளார்.

'' தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது ''

என்பது அவ்வருமைத் திருக்குறள். தனக்கு ஒருவாற்றானும் ஒருவரும் நிகரில்லாத ஒருவன் யார்? இறைவனொருவன்தான். அவனது தாளை - திருவடிகளைச் சேர்வதுதான் மனக்கவலை நீங்குதற்கு வழி என்கின்றார். தாள் சேர்ந்தவர் மனக்கவலை மாற்றுவர்' என்று உடன்பாட்டில் கூறாமல், 'தாள் சேர்ந்தவர்க்குத் தவிர, மற்றவர்களுக்கு மனக்கவலையை மாற்றுதல் இயலாது' என்று எதிர்மறையில் கூறியதனால், 'அஃது ஒன்றைத் தவிர, மனக்கவலை மாற்றுதற்கு வழி வேறு எதுவுமே இல்லை' என்பது தெளிவாகின்றது.

' இறைவனது தாளைச் சேர்தல்' என்பது யாது? ' இறைவனது திருவடி ஒன்றே நமக்குத் துணை ; வேறு எவையும் நமக்கு துணையாவன அல்ல' என்று அறிந்து, அதனையே எப்பொழுதும்

இடைவிடாது நினைத்தல்தான் இறைவனது திருவடியைச் சேர்தல் என்பதாகும். அப்பரது திருவுள்ளம் இப்படித்தான் இறைவன் திருவடியைவிட்டு நீங்காதிருந்தது என்பதை,

"நாயகன் சேவடி தைவரும் சிந்தையும்"

என்றும்,

"செம்பொற்றாளே சார்வான திருமனமும்"

என்றும் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

இறைவனுடைய திருவடி எத்தகையது என்பதைத் திருவள்ளுவர் குறிப்பாகச் சில சொற்களில் புலப்படுத்துகிறார். 'நற்றாள் பிறவிப் பிணிக்கு மருந்தாய் இருப்பது, மாண் அடி - இன்பமே வடிவானது, பிறவிப் பெருங்கடலைக் கடப்பிக்கும் புணையாய் உள்ளது' என்பன அவரால் குறிப்பிடப்பட்டவை. இன்னும் எண்குணத்தான் தாள்" என்றதனால் 'அவ்வெண் குணங்களின் வடிவாய் உள்ளது' என்பதும பெறப்படுகின்றது.

திருவள்ளுவர் இவ்வாறு குறிப்பினாற் கூறிய திருவடியின் பெருமைகளை அப்பர் தமது அருட்பாடல்களில் மிக விரிவாக விளக்கியிருக்கின்றார். "சிந்திப்பரியன" என்னும் திருவை யாற்றுத் திருவிருத்தப் பதிகமும், "மன்னும் மலைமகள் கையால் வருடின" என்னும் திருஇன்னம்பர்த் திருவிருத்தப் பதிகமும், "அரவணையான் சிந்தித் தரற்றும் அடி" என்னும் திருத் தாண்டகத் திருப்பதிகமும் இறைவன் திருவடியின் சிறப்பு ஒன்றையே விரிவாக எடுத்து விளக்குவன. இவற்றுள், "சிந்திப்பரியன" என்னும் திருப்பதிகம இருபது பாடல்களை உடையதாய் விளங்குகின்றது.

'தேவாரம் நுதலிய பொருள்கள் எட்டு' என்பதும். 'அவற்றுள் திருவடி ஒன்று' என்பதும் அகத்தியர் தேவாரத் திரட்டால் அறிகின்றோம். அதனால், தேவாரங்களில் திருவடி யின் பெருமை ஆங்காங்குச் செறிந்து விளங்குகின்றன என்பது பெறப்பட்டாலும், அப்பர் தேவாரத்தில் அஃது உள்ளங்கை நெல்லிக்கனி போல ஒருங்கு திரண்டு காணப்படுதல்போல, மற்றைய தேவாரங்களில் காணப்படவில்லை. அதுபற்றித்தான் போலும் சேக்கிழார், நாயகன் சேவடி தைவரும் சிந்தையை நாவுக்கரசர்க்கே உரியதாக்கி அருளினர். இன்னும்,

"கோவாய் முடுகி அடுதிறற் கூற்றம்
குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவடு என்மேற் பொறித்துவை"

என்று கேட்டுப் பெற்று,

"நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே."

என்று பாடிக் களித்தவரும் அவரேயன்றோ!

இவ்வகையில், தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்த காரணத்தால்தான் அவர்,

"வானந் துளங்கில்என்! மண்கம்பம் ஆகில்என்!"

என்றும்,

"நாம்ஆர்க்குங் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோ மல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"

என்று மனக்கவலையின்றி மகிழ்ந்திருந்தார். ஆகவே, மனக்கவலை மாற்றுதற்கு வழி இறைவன் திருவடியைச் சேர்தலையன்றி வேறில்லை என்பது திட்டமாய்த் தெரிகின்றது.

இனி, உண்மையில் உள்ளத்தால் இறைவன் திருவடியைச் சேர்ந்தோர், உரையாலும், செயலாலும் என்ன செய்தல் வேண்டும்? அதனையும் நாவுக்கரசரிடத்தில்தான் நாம் நன்கு உணர்கின்றோம். "பெரும்பற்றப் புலியூரானைப் - பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றபடி, நாவினால் இறைவனது நாமத்தை உச்சரித்தலும், அவனது பொருள்சேர் புகழ்கள் பலவற்றைப் பாடுதலும், காயத்தால் அவனுக்குப் பணிபுரிதலும் வேண்டும். நாவுக்கரசர் முதலியோர் தாமே தமிழ்மாலைகள் பல பாடி இறைவனை வாழ்த்தினார்கள். எல்லோர்க்கும் அஃது இயலாது. அவர்கள் பாடிய அப்பாடல்களையே அனைவரும் பாடி இறைவனை வாழ்த்தலாம் இதனைச் சுந்தரமூர்த்திநாயனார்.

"நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானை"

என்று அறிவுறுத்தருள்கின்றார். அப்பர்பெருமான் உழவாரப் பணியாகிய கைத்தொண்டினைச் செய்து வந்தமை யாவரும்

நன்கறிந்தது. அதனுடன், 'நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப் புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப் பூமாலை புனைந்தேத்த வேண்டும்' என்றும் அவர் அருளிச்செய்ததைக் காண்கின்றோம். இவற்றால், மனக்கவலை இன்றி வாழ்வதற்கு இறைவன் திருவடியை உள்ளத்தால் நினைந்து, உரையால் அவனது திருநாமத்தைச் சொல்லி அவன் புகழைப்பாடி, உடலால் அவன் திருப்பணியைச் செய்யவேண்டும் என்பது தெளிவாகின்றது. இந்த நிலையை எங்கள் ஆதி பரமாசாரிய சுவாமிகள் தங்கள் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெருமானிடம் வேண்டிக்கொண்ட திருப்பாடலே முதலில் கொடுக்கப்பட்டது.

சொக்கலிங்க மூர்த்தியினது பெருமைகள் பலவற்றில், மனக்கவலை நீக்குவதையே சிறப்பாக அவர்கள் முதலில் எடுத்துக் கூறியருளுகின்றார்கள். தென்மதுரையில் வாழ்கின்ற நின்மலனாகிய அவனே எல்லா உலகங்களையும் ஆக்கிக் காத்து நடத்துகின்றான். ஆதலால், அவனே எல்லாம் செய்ய வல்லவன்; அதனால், தன் அடியார்களுக்கு அவர்கள் கேட்ட வரத்தைக் கொடுத்து மனக்கவலையை நீக்குபவன். அப்பெருமானிடம் எங்கள் பரமாசாரிய சுவாமிகள் என்ன வரம் வேண்டுகின்றார்கள்? பொன்னும், பொருளும், போகமும் ஆகியவற்றைத் தரவேண்டும் என்று அவர்கள் வேண்டவில்லை. அவை எல்லாம் மனக்கவலையை நீக்காததுமட்டுமன்று; மனக்கவலையை இன்னும் மிகுதியாக உண்டாக்கும். ஆகவே, அவர்கள் வேண்டுவன இவை.

" எனது உடல் எப்பொழுதும் உன் திருப்பணி ஒன்றையே செய்யவேண்டும்; எனது உள்ளம் உன்னையே எப்பொழுதும் நினைக்க வேண்டும்; இந்த வரத்தை எனக்கு நீ கொடுத்தால் போதும் "

நாவுக்கரசரும் நம் பெருமானிடத்தில் என்ன வேண்டினார்?

" புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன் அடி
என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும் "

என்றுதான் வேண்டுகின்றார். இறைவனது திருவடியை மறவாதிருத்தலே திருவடி ஞானம். அதனைத் தவிர ஞானம் வேறு என்ன உண்டு? அதனால்தான், ஞானிகள் அஃது ஒன்றையே

வேண்டுகின்றார்கள். ஞானசம்பந்தர் இறைவன் திருவடியை மறவாதிருக்கும் நிலையை முன்பே பெற்றிருந்தார் என்பதைச் சேக்கிழார்,

"பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் அளித்தருள"

என்று குறித்தருளினார். நம் போன்றவர்க்கெல்லாம் திருவடி ஞானம் ஆசாரியரது அனுக்கிரகத்தால் உண்டாகும்.

"சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்று மாபோல்
ஆரியனும் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்"

என்பது சிவஞானசித்தி. அதன்படி, எங்கள் ஆதிபரமாசாரியரது அருள்வாக்கினால் அதனை வரும் திருவடிஞானத்தை எளிதில் பெறலாகும். அதற்கு வேண்டுவது அவரிடத்தில் பக்தி ஒன்றே.

இந்தத் திருவடி ஞானத்திற்குத் துணையாக முன்னும் பின்னும அவர்கள் சிலவற்றை அருளுகின்றார்கள். 'உனது திருவடியை அடைந்தபின், முன்போல மும்மலங்கள் என்னை வந்து பற்றுதல் கூடாது; சன்மார்க்கராகிய தபோதனருடனே என்னையும் நீ சேர்த்தருளுதல் வேண்டும்; பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை என்ற மூவாசைகள் என்பக்கம் வரலாகாது' என்பன அவை. இவற்றிற்கிடையே மற்றொரு புதுமை காணப்படுகிறது. பாசத்தைக் கோடை என்றும், இறைவன் திருவருள் அதனைத் தணிக்கும் மழை அல்லது நிழல் என்றும் கூறுதல் எங்கும் காணப்படும்; எங்கள் பரமாசாரிய சுவாமிகள், 'பாசமாகிய பனியினால் உண்டாகின்ற குளிர் நீங்கும படி திருவருளாகிய சூரியன் உதயமாகி வருவது எப்பொழுது' என்று அருளுகின்றார்கள். இத்தகைய அற்புத அருள் வாக்கினை ஓதினால் அடிஞானம் பெற்று, மனக்கவலையற்று வாழ்தல் கூடும்.

சொக்கலிங்கப் பெருமான் அம்மையில்தான் பயன்கொடுப்பான் என்பதில்லை; இம்மையிலும் எல்லாம் தருவான் என்பதைக் கூறும் பாடல் ஒன்று அவர்கள் அருள்வாக்கின் இறுதியில் காணப்படுகின்றது; அதனையே நாமும் கூறி முடிப்போம்:

தண்டுவரும்; குண்டுவரும்; தானைவரும்; ஆனைவரும்;
வண்டில்வரும்; மாடுவரும்; மாடுவரும் மிண்டிப்
பெருங்கோட்டை யுஞ்சுமையும் பின்புவரும், கூடல்
அருங்கோட்டை வாசலிற்சென் றால்.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 25, இதழ் 10, பக்கம் 436 இன் தொடர்ச்சி)

மூவகை ஐந்தவத்தைகள்

மாணுக்கன் : கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று நிலைகள் தவிர வேறு எவையேனும் நிலைவேறுபாடுகள் உயிர்களுக்கு உண்டோ?

ஆசிரியர் : உண்டு; அவை, 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' என்பன ?

மாணுக்கன் : கேவலம் முதலிய மூன்றும் தவிர, இவை வேறு எங்ஙனம் நிகழும்?

ஆசிரியர் : 'கேவலம்' என்பது யாது? உயிர் ஆணவ மலம் ஒன்ருேடு மட்டும் கூடியிருப்பது. அஃதாவது, உயிர் அறியாமையே வடிவாய் இருப்பது. இந்நிலை, மும்மலங்களோடும் கூடியிருக்கின்ற இச் சகல நிலையிலும் நமக்கு நிகழ்கின்ற தன்ருே?

மாணுக்கன் : அஃது எப்படி ?

ஆசிரியர் : உயிர் உடம்போடுகூடி நின்று பல பொருள்களை அறிந்தும், பல செயல்களைச் செய்தும் வருகின்ற சகல நிலையிலும் இடைஇடையே உறக்கம் வருகின்றதன்ருே ? அவ்வுறக்கத்தில் உயிருக்கு என்ன அறிவு நிகழ்கின்றது? இல்லை. ஆகவே, உறக்கம் கேவலநிலைதானே ?

மாணுக்கன் . ஆம்! அறிவற்ற நிலைதான் கேவலம் என்ருல், உறக்கம் கேவலந்தான்.

ஆசிரியர் ; அதுபோலவே விழிப்பு நிலையில் அறிவு நிகழ்தலால், அது சகலமேயாகின்றது. உறக்கத்திற்கும், விழிப்

பிற்றும் இடையில் கனவு உண்டாகின்றது; அதில் அறிவு அரை குறையாய் நிகழ்கின்றது. இப்படிப் பார்க்கும்பொழுது, விழிப்பு, கனவு, உறக்கம் என மூன்று நிலைகள் ஒவ்வொருவருக்கும் அன்றாடம் மாறி மாறி வருதல் அனைவரும் அறிந்ததாகும். விழிப்பே, 'சாக்கிரம்' என்றும், கனவே, 'சொப்பனம்' என்றும், உறக்கமே 'சுழுத்தி' என்றும் சொல்லப்படுகின்றன.

மாணுக்கன்: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்பன இவை என்பது ஒருவாறு விளங்குகின்றது; அவற்றிற்குமேல், 'துரியம், துரியாதீதம்' என்பன யாவை?

ஆசிரியர்: அவைகளும் உறக்கத்தின் வகைகளே. உறக்கத்தில் மிகவும் ஆழ்ந்துவிடுகின்ற பேருறக்கம் ஒன்று உண்டு: அஃதாவது, நெடுநேரம் உறங்கி விழித்தபின், அத்துணை நேரம் உறக்கத்தில் கழிந்தமை தோன்றாத ஒருநிலை உண்டாவது உண்டு. அதுவே பேருறக்கமாம. உறக்க நிலையிலிருந்து விழித்தால் நெடுநேரம் உறங்கினமை அறியப்படும்; பேருறக்கத்திலிருந்து விழித்தால் அஃது அறியப்படாது; இதுவே இவ்விரண்டிற்கும் வேறுபாடு. இவற்றுள் பேருறக்கமே, 'துரியம்' எனப்படுவது. உறக்கத்திலும், பேருறக்கத்திலும் பிராணவாயு இயங்குதல் ஒழியாது. அதுவும் இயங்காது அடங்கிநிற்கும் நிலையே துரியாதீதம். 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' என்பன முறையே, 'நனவு, கனவு உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல்' எனவும் சொல்லப்படும்.

மாணுக்கன்: இங்குக் கூறிய ஐந்து நிலைகளில் சாக்கிரம் அல்லது நனவு என்னும் ஒன்று தவிர, ஏனைய நான்கிலும் அறிவு குறைதலால், அவை கேவலமாகின்றன என்று அறிகின்றேன்.

ஆசிரியர்: ஆம்! அஃது உண்மையே. இனி அவைமட்டுமல்ல; சாக்கிரத்திலேயும் ஒரு கேவலநிலை உண்டு; அஃதாவது, கனவோ உறக்கமோ இல்லாமல் விழித்திருக்கின்ற நிலையில் அறிவு இருவகையாய் நிகழ்தலைக் காணலாம். ஒன்று பொருள்களை எழுச்சியுடன் நன்குணர்தல்; மற்றொன்று சோம்பல்கொண்டு மந்தமாய் உணர்தல். இவற்றுள், மந்தமாய் உணரும் நிலையில் அறிவு குறைந்து நிற்கும். ஆகவே, அதுவும் கேவல நிலையேயாகும். மந்தமாய் உணரும் நிலை கேவலம் எனவே, 'எழுச்சியுற்று உணரும் நிலை சகலம்' என்பது சொல்லவேண்டா; எனவே, 'சகல சாக்கிரம், கேவல சாக்கிரம்' எனச் சாக்கிரம் இருவகைப்படும் என்பது விளங்கும்.

மாணாக்கன் : ஆம்! சாக்கிரம் இங்ஙனம் இருவகையாய் நிகழ்கின்றது என்பதை உணர்கின்றேன். சொப்பனம், சுழுத்தி முதலியனவும் இருவகையாய் நிகழுமோ ?

ஆசிரியர் : நிகழும். நமக்கு நன்கு விளங்குவன மேற் கூறிய கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்னும் நான்கிலும் அறிவு குறைதல் வெளிப்படையாதலின், அவை நான்கும், 'கேவல சொப்பனம், கேவல சுழுத்தி, கேவல துரியம், கேவல துரியாதீதம்' என்பது விளங்குகின்றது. இவற்றோடு மேற்குறித்த கேவல சாக்கிரத்தையும் சேர்க்க, கேவல ஐந்தவத்தைகள் இவை என்பது தெளிவாகும்.

இனி, அறிவு சிறிதும் குறையாத நிலையிலேயே ஐந்துவகை நிலைகள் உள்ளன; அவையே, சகல சாக்கிரம், சகல சொப்பனம், சகல சுழுத்தி, சகல துரியம், சகல துரியாதீதமாகும், இவற்றை மேற் சொல்லிய கேவல சாக்கிரம், கேவல சொப்பனம் முதலியன போலத் தெளிவாக எடுத்துக்காட்ட இயலாது; அவரவர்களே தங்கள் தங்கள் அன்றாட நிகழ்ச்சிகளில் வைத்து அறிந்துகொள் ளுதல் வேண்டும். அந்நிலைகள் பொருள்களை அறியுங் காலத் திலும் அவற்றை இடைவிடாது அறிதலின்றி, விட்டு விட்டு அறிதலேயாம். சாக்கிர நிலையில் பொருள்களை அறியும்பொழுது நாம் இடைவிடாது தொடர்ச்சியாய் அறிந்துகொண்டே இருப்ப தில்லை. இடையிலே விட்டுவிட்டுத்தான் அறிகின்றோம். அதை நுனித்து நோக்கினால் விளங்கும். ஆயினும், விடுதலும், பற்று தலும் மிக விரைவில் மாறிமாறி நிகழ்தலால், சாக்கிர நிலையில் விடுதல் நமக்குப் புலனாவதில்லை. தொடர்ச்சியாய் அறிந்து கொண்டிருப்பதுபோலத் தோன்றுகின்றது. அஃது உண்மை யன்று என்பது, சில பெரிய நிகழ்ச்சிகள் நிகழும்போது தெரிய வரும்.

வழிப்போக்காக எங்கேனும் செல்லும்பொழுது ஓரிடத்தில் ஒருபொருளை வைத்துவிட்டு மறந்து செல்வது இயற்கையில் நிகழ்கின்ற ஒன்றே. பின்னர் அப்பொருளைப் பற்றிய நினைவு தோன்றியவுடன், அஃது அரியதொரு பொருளாய் இருப்பின் மூர்ச்சை உண்டாவதும் உண்டு. பின்பு சிறிது நேரம் சென்ற பின் மூர்ச்சை தெளியும்; தெளிந்தபின் துன்ப மேலிட்டால் ஒன்றும் தோன்றாமல் கையற்றுக் கலங்குதல் உண்டாகும். பின்பு அக்கையறவு நீங்கி, 'அஃது எங்கே, எவ்வாறு போயிருக் கும்' என்று ஆராயும் ஆராய்ச்சி நிகழும். அந்த ஆராய்ச்சி யின் வழியே தேடுதலாகிய செயலும் உண்டாகும். பின்பு அம் முயற்சியால் பொருள் கிடைப்பின் மகிழ்ச்சியும், கிடையாவிடின்

துன்பமும் தோன்றும். ஒரு பொருளை அறியுமிடத்தில் இப்படிப் பல நிலைகள் தோன்றுகின்றன. எப்பொருளை அறியினும் இப்படியே பல நிலைகள் தோன்றும்; அவைகளே சகல சாக்கிரம், சகல சொப்பனம் முதலியனவாம். சுருங்கக் கூறுமிடத்து, விழிப்பு நிலையில் நினைப்பும், மறப்பும் மாறி மாறி வருவதே சகல சாக்கிரம் முதலிய ஐந்தும் என்க. இங்குக் கூறிய எல்லா நிலைகட்கும், உடம்பில் உள்ளனவும், பிறவுமாகிய கருவிகள் கூடுதல் குறைதல்களே காரணமாகும். அக்கருவிகள் இவை என்பதையும், அவை இவ்விந்நிலைகளில் எந்த அளவில் கூடும் குறையும் என்பதையும் பாசத்தின் இயல்பைப்பற்றிக் கூறுமிடத்தில் தெரிந்துகொள்ளலாம்.

மாணாக்கன் : அடியேன் சகல சாக்கிரம் முதலிய ஐந்தனையும் ஒருவாறு உணர்கின்றேன். அது நிற்க, கேவல சாக்கிரம், கேவல சொப்பனம் - சகல சாக்கிரம், சகல சொப்பனம் முதலியனபோல சுத்த சாத்திரம், சுத்த சொப்பனம் முதலியன உளவோ ?

ஆசிரியர் : ஆம் ! உள்ளன. அவை உயிரினது அறிவு உலகத்தை உணர்தலை விடுத்து இறைவனை உணரும் நிலைகளாம். அவற்றை முத்திநிலை கூறுமிடத்தில் அறிந்து கொள்ளலாம். ஆயினும், சாக்கிரம் முதலிய ஐந்தும், 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்று நிலையும் பற்றி நிகழும்; எனவே, மூத்திறத்து ஐந்தவத்தைகள் உயிர்களுக்கு உள்ளன என்பதை நன்குணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றுள் கேவலம் முதலிய மூன்றும், காரண அவத்தை; சாக்கிரம் முதலிய ஐந்தும் காரிய அவத்தை. இறைவன் உடம்பைக் கூட்டுதற்குமுன் இருந்த கேவல நிலை, அநாதி கேவலம்; அன்றுடம்வரும் கேவல நிலை நித்திய கேவலம். இவையேயன்றி, யோக நிலையிலும் ஐந்தவத்தைகள் உண்டு; அவற்றைச் சாதனம் கூறுமிடத்தில் கூறுவோம். இவ் அவத்தைகளை அடைந்து நிற்பதே உயிருக்குத் தடத்த லக்கணம் எனப்படும் பொதுவியல்பு ஆகும்.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswareswami Devasthanam, Tirucadaiyur.

I was happy to visit the Thirukadayur temple for worship today. It is a very well maintained temple. I wish every success to the management of the temple.

(Sd.) V Balasundaram,
Member (IV)
Board of Revenue, Madras.

4—10—66.

புராணம்

வேதாந்த சிரோமணி,
பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

(முதல் இதழ், பக்கம் 76ன் தொடர்ச்சி)

புராணங்களில் உள்ள விஷயங்களை ஒரு சிறிது அறிந்தால் தான் அதைப்படிக்க ஆவல் உண்டாகும். அவை அளவில் பெரியனவாக இருத்தலின் தனக்கு வேண்டிய விஷயமுள்ள புராணத்தைத் தெரிந்துகொண்டால் அதைமட்டுமாவது படிக்கலாம். ஆதலின் அவற்றிலுள்ள விஷயங்கள் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

1. வைஷ்ணவம்: இது விஷ்ணுவைப்பற்றியது. பல வியாக்கியானமுடையது. சங்கராசாரியார் தனது பாஷ்யத்தில் இப்புராணத்திலுள்ள சுலோகங்களையே அதிகமாக மேற்கோள் காட்டுகிறார். விஷ்ணுபக்தர் பலரின் சரிதமுடையது.

2. நாரதீயம்: இது நாரதமுனிவர் சனகாதிமுனிவர்களுக்குக் கூறியதாக அமைந்துள்ளதால் நாரதீயம் எனப் பெயர் பெற்றது. சுமார் 25 ஆயிரம் சுலோகமுடையது. அநுஷ்டானத்திற்கும் சிராத்தத்திற்கும் பயன்படும் பல சுலோகங்கள் இதிலுள்ளன.

3. பாகவதம்: பன்னிரண்டு ஸ்கந்தங்களில் சுமார் 18 ஆயிரம் சுலோகமுடையது. வேதம்போன்ற பாஷையுடையது. வேதங்களை வியாஸர் வகுத்தவுடன் இதை வியாஸர் இயற்றியபடியால் பாஷை அவ்விதம் உள்ளதுபோலும். விஷ்ணு பக்தர்களின் சரிதம், கிருஷ்ணலீலா, தசாவதார வரலாறுகள் உள்ளன, ஸ்ரீதரருடைய உரையும் உண்டு. ஆங்கில மொழி பெயர்ப்பும், தமிழ் மொழிபெயர்ப்பும் உள்ளது.

4. காருடம்: சுமார் 19 ஆயிரம் சுலோகமுடையது. பகவானிடம் கருடன் கேட்டமையால் காருடம் எனப்பெயர். இதன் நடுக்காண்டம் பிரேதகாண்டம் எனப்படும். அதில் யமலோக வர்ணனை. இறந்தவன் யமலோகம்போகும் பாதை. நடுவில் தங்குமிடங்கள் முதலியன கூறப்படுவதால் இக் காண்டத்தை

இறந்தவர் வீட்டில் படிப்பது வழக்கம். மேற்கூறிய நான்கும் விஷ்ணுபரமான புராணங்கள்.

5. பிராம்மம்: பிர்மாவின் பெருமை கூறப்படுவதாலும் பிர்மாவினால் கூறப்பட்டபடியாலும் இப் பெயர் கொண்டது. கண தேவதைகள், 14 மன்வந்தரம் முதலியன கூறப்படுகின்றன.

6. பாத்மம்: பத்மவடிவமான உலக விஷயம் கூறப்படுதலின் பாத்மம் எனப்பெயர். 25 ஏகாதசிகளின் தனித்தனியான பெயரும், அவற்றின் பெருமையும் பகவத்கீதை 18 அத்தியாயங்களுக்கும். தனித்தனி கதையும், இராமாயணத்தின் பெருமை முதலியனவும் கூறப்படுகின்றன.

இவ்விரண்டு புராணங்களும் பிரமனின் பெருமை கூறுவன.

7. ஆக்னேயம்: அக்நிபகவான் வசிஷ்டமுனிவருக்குக் கூறியதாக அமைந்திருப்பதால் ஆக்னேயம் எனப் பெயர்பெற்றது. ஆலய அமைப்பு, தேவப்பிரதிஷ்டை, வைத்யம், சில்பம், தேகப்பயிற்சி, நடனம், கானம், ரணவைத்யம், பாலாரிஷ்ட சாந்தி முதலியன கூறப்படுகின்றன. இது அக்னியைப் பற்றியது; இவ் வுலகில் பயன்பெறக்கூடிய பல சாந்திகளும் உள்ளன.

8 பிர்மவைவர்த்தம்: பழுதையில் பாம்பு தோன்றுவதுபோல இல்லாத பொருள் ஒன்றில் தோன்றுவது விவர்த்தம் எனப்படும். பிர்மமே உலகமாக தோற்றமளிப்பதாக இதில் கூறப்படுகின்றபடியால் பிர்மவைர்த்தம் எனப் பெயர்பெற்றது. சூரியனுடைய பெருமையை உணர்த்துவது. பல க்ஷேத்ரமாகாத்மியம் உள்ளது.

9. சைவம்: வாயு கூறியபடியால் இதை வாயுபுராணம் என்றும் கூறுவர். த்வாதச ஜ்யோதிர்லிங்கம் பற்றிய வரலாறு விரிவாக உள்ளது. விபூதி ருத்ராக்ஷ, பஞ்சாக்ஷரம், சிவநாம மகிமை, சிவராத்திரிமகிமை, சிவசகஸ்ரநாமம், சரபாவதாரம், உபமன்யுமுனிவரிடம் சிவதீக்ஷை பெற்று கிருஷ்ணன் சாம்பனைப் பெற்றது முதலியன உள்ளன.

10. பவிஷ்யம் அல்லது பவிஷ்யோத்தரம்: வருங்கால விஷயங்களைக் கூறுவதால் இப்பெயர் உண்டாயிற்று.

11. மார்க்கண்டேயம்: மார்க்கண்டேயரால் கூறப்பட்டது. தேவி மாகாத்மியம் என்ற சப்தசதீ மகாமந்திரம் இப் புராணத்தில் உள்ளது. இதில் மார்க்கண்டேயர் சரிதம் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

12. லிங்கம்: சிவபெருமானின் அஷ்டமூர்த்தங்கள், சிவ தீக்ஷை, பஞ்சாக்ஷரம் சிவவிரதம் ருத்ராக்ஷவகை முதலியன கூறும் ஒரு சைவபுராணம்.

13. வராஹம்: வராஹமூர்த்தி பூமிதேவிக்கு உரைத்தது. சுமார் 24 ஆயிரம் சுலோகமுடையது. தசாவதாரம், பல கீதைகள், கீதாமாகாத்மியம் முதலியன உள்ளன.

14. ஸ்காந்தம்: ஸ்கந்தனைப்பற்றிக் கூறுவது. ஸநத்குமார, சூத, சாங்கரி, வைஷ்ணவீ, பிராஹ்மீ, ஸௌரீ என்ற ஆறு சம்ஹிதைகள் உள்ளன. இதில் சூத ஸம்ஹிதையும், சாங்கர சம்ஹிதையும் அச்சாகியுள்ளன. சூதசம்ஹிதையை பதினெட்டு முறை படித்து ஸ்ரீசங்கரர் வேதாந்த பாஷ்யம் எழுதியதாகக் கூறுகிறார்கள்.

15. வாமனம்: உருவில் சிறியதாயினும் விஷயம் நிறைந்தது. திருமால் வாமனவதாரத்துடன் கூறியதால் இப்பெயர்.

16. கூர்மம்: கூர்ம ரூபியான பகவான் கூறியது. சிவ மகிமை கூறுவது விஷ்ணுவின் பெருமையைக் காட்ட கூர்ம புராணத்தைக் கூறி அது சைவமாக இருந்த காரணத்தால், கூர்மத்தை நம்பி குடிகெட்டுப் போனேன் என்றபடி மொழி உண்டாயிற்று போலும்.

17. மாத்ஸ்யம்: மத்ஸ்யமூர்த்தி கூறியதால் இப்பெயர் உண்டாயிற்று. இதிலுள்ள சில சுலோகங்கள் தற்காலம் சிராத்தத்தில் கூறப்படுகின்றன. இதற்கு ஆங்கில மொழிபெயர்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

18. பிரம்மாண்டம்: பிர்மா பிர்மாண்டத்தைப்பற்றிக் கூறினார். சுமார் 12 ஆயிரம் சுலோகமுடையது. க்ஷேத்திரமகிமை, ஸ்ரீ லலிதாதேவி பண்டாசுரனைக் கொன்று உலகைக் காத்தது முதலியன கூறப்படுகின்றன,

இவ்விதம் பதினெண் புராணங்களையும் உபபுராணங்களையும் படிப்பது மிகவும் நன்மை பயக்கவல்லது.

नारायणं नमस्कृत्य नरं चैव नरोत्तमम् ।
देवीं सरस्वतीं चैव ततो जयमुदीरयेत् ॥

(जयम् - 18 எண்ணுடைய புராணம்)

'அமுதிற்குத் தமிழென்று பேர்'

வித்துவான், திருமதி. ப. நீலா

(மலர் 25, இதழ் 10, பக்கம் 457 இன் தொடர்ச்சி)

சங்க இலக்கியத் தொகை நூல்களைத் தொகுத்துக் கூறும் பாடல் ஒன்று உண்டு :

" நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறு நூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை. "

சங்கத்தில் வளர்ந்த துங்கத் தமிழ் நூல்கள் பல கடல்கோள்களுக்கு இரையான செய்தி இன்னும் நம் நெஞ்சை விட்டு மறையவில்லை. இருந்தும் தமிழ்மக்கள் செய்த தவப்பயனால் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, முத்தொள்ளாயிரம், சிலம்பு, பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் போன்றவைகளாயினும் இன்று நெஞ்சினிக்கும் நினைவுகளைத் தருகின்றன.

தமிழ் மக்களின் கடந்த கால நடை, உடை, கலாசார வகைகளைக் காட்டும் கண்ணாடிகளே இந்நூல்கள் எனில் பிழையில்லை. ஆகவே இலக்கியக் கண்ணாடிகளாம் இவைகளைக் கொண்டு இனித்திடும் காட்சிகள் பல காணலாம். 'நற்றிணை நல்ல குறுந் தொகை' - என்ற பாடலில் நூல்களின் வரிசை முறை எப்படி அமைந்ததோ - நாம் அறியோம். ஆயினும் அப்பாடல் காட்டும் முறையிலேயே அந்தந்த நூல் காட்சிகளைக் கண்டுசுவைப்போம்.

இனிப்புச் சுவையறியாத குழந்தையின் வாயில் இனிப்புச் சுவையைத் தீற்றிவிடுவதன் நோக்கம் அஃது, அதுவாயிலாக இனிமையின் முழுமையை அறிய வேண்டும் என்பதே. இவ்வுவமை ஒன்றே எனது கட்டுரையின் நோக்கத்தை விளக்கப் போதுமானதாக இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

நற்றமிழ் போதிந்த நற்றிணை :

ஐந்து திணைபற்றியும் அமைந்த நானூறு பாடல்களைக் கொண்ட இந்த நூலின் சிறிய அடிவரையறை ஒன்பது ;

பெரிய அடிவரையரை பன்னிரண்டு. பல்வேறு இலக்கியப் புலவர்களால் பாடப்பட்ட இந்நூல் 'பன்னாடு தந்த மாறன் வழுதி' - என்பவரால் தொகுக்கப்பட்டது. நூலினுள் நுழைந்து சில முத்துக்களைக் காணலாம்.

தலைவியொருத்தி தன் உள்ளங்கவர்ந்தவன் வாராமையால் வாடி நிற்கிறாள். தோழி அவள் உள்ளத்தைப் புரிந்துகொண்டு பேசுகிறாள். 'முன்னொருசமயம் தலைவன் தனது அன்புடைமையை வெளிப்படுத்திய நேரம் நீ மயங்கி நின்றாயே! கள்வனைப் போன்ற வஞ்சகுணம் கொண்ட கொடியனே அவன்' என்று இடித்துரைக்கிறாள்.

என்னுடைய கைகளால் தன் கண்களைப் புதைத்தலும், தன் கையால் என் நெற்றி நீவுதலும் ஆகிய செயல்களைச் செய்யும் போது அருள்நிறைந்த அன்னைபோலக் காட்சிதந்தான். ஆனால் மனத்திலே வன்கண்மை கொண்டவன் - உன்னைப் பிரிந்தும் ஆற்றியிருக்கும் கொடுமனங் கொண்டவன் என்பதனை நீ உணரவில்லையே. (தோழி - தன்னை தலைவி கூற்றிலேயே வைத்துப் பேசும் உரிமை படைத்தவள் என்பதனை 'ஒன்றித் தோன்றும் தோழி மேன' (அகத் - 39) என்ற தொல்காப்பியச் சூத்திரம் உணர்த்தும்.) இதோ காட்சியின் இலக்கிய வரிகள்.-

" என் கைக் கொண்டு தன்கண் ஒற்றியுந்
தன்கைக் கொண்டென் நன்னுதல் நீவியும்
அன்னைபோல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன் மாதோ."

—நற். 28 முதுகூற்றனார்.

" சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து'

என ஓர் தலைவி அவலப்படுவதை அழகுறச் சொல்வார் வள்ளுவர்.

தலைவன் ஒன்றைத் தன்னால் மறக்க முடியவில்லையே என்று பாகனொடு பேசும் மிகவுயர்ந்த இடம் ஒன்று நற்றிணையில் உண்டு. அது வருமாறு:-

'பலநாள் நீரைக் காணாமல் வறண்டுவிட்ட பூமி குளிரும் படியாகப் பெய்த மழையின் புதிய நீர், தெருவின் பள்ளங்களிலே தேங்கி நிற்க, அதன்கண் அமைந்த தவளைகள் தம் நாவினாலே பெருத்த ஓசையை இடைவிடாமல் செய்ய, அதனால் என் தேர்

வரும்போது அசையும் மணியோசையைத் தலைவியால் கேட்க இயலவில்லை. அதனைக் கண்டதும் இளையர்களை முன்னே விடுத்து எனது வருகையை அறிவிக்கச் சொன்னேன். எனது வரவினை அறிந்தவள் தூசு படிந்த தன் கூந்தல் விளங்குமாறு நீராடி, சில மலர்களைக் கொண்டு கூந்தலில் அணியும் நேரம் நான் இல்லினுள் புகுந்தேன். என்னைக்கண்ட அம்மங்கை நல்லாள் தன் மெய்துவள, அவிழ்ந்து குலையும் முடியினளாய் என்னை அணைத்துக்கொண்ட நிலையை என்னால் மறக்க ஒல்லுமோ' என்று வினவுகிறான் பாங்கனிடம்.

தலைவனைப் பிரிந்திருக்குங்கால் ஒப்பனை இன்றி இருந்தாள் கண்ணகி என்பதைச் சிலம்பில் நாம் காண வழி செய்கிறார் இளங்கோவடிகள் :

"அஞ்செஞ் சீறடி யணி சிலம் பொழிய
மென் துகில் அல்குல் மேகலை நீங்க
....
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி"

(அந்திமாலை 47-57)

இராமாயண சுந்தர காண்டத்தில் சீதையின் நிலையினையும் இதனை ஒத்தே வருணிக்கிறார் கம்பர் :

"ஆவியந்துகில் புனைவ,தொன் றன்றி, வேறறியாள்
தூவி யன்ன மென்புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தெண்கடல் அமிழ்துகொண் டனங்கவேள் செய்த
ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்"

கீரத்தனாரின் கருத்திற்கினிய ஓவியம் இதுதான் :

"மறத்தற் கரிதால் பாக! பன்னாள்
வறத்தொடு பொருந்திய உலகுதொழிற் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீ ரவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக் கறியுந ராக மெல்லென
மண்ணுக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய

அந்நிலை புகுதலின் மெய்வருத் துருஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே.'' (நற். 42)

மற்றொரு எழுத்தோவியம் எழிலுடன் அமைந்துள்ளது. அறிவுநிரம்பிய தோழி தலைவன் ஒருவனிடம் வரைவு பற்றித் தந்திரமாக நினைவூட்டுகிறாள்.

மணம் நிகழாமைக்கு மங்கை வாடுகிறாள். ஆனால் மணம் என்று நான் சொன்ன அளவில் உம் முகம் ஒளியிழக்கிறது எனத் தோழியின் கூற்றில் மணிவாசகர்,

'' மன்னும் திருவருந் தும்வரை யாவிடில் நீர்வரை வென்று
உன்னும் அதற்குத் தளர்ந்து தளர்ந்து ஒளிவாடுதிர் '

எனத் திருக்கோவையாரில் வரைந்து செல்கிறார்.

இதே நிலையில் அமைந்த நற்றிணைத் தோழியின் பேச்சை சற்றுச் செவிகொடுத்துக் கேளுங்கள்:

''தலைவனே! உனது நாட்டில் நடக்கும் காட்சி ஒன்றினை நீ கண்டதுண்டா? சிங்கம், புலி முதலாகிய கொடிய விலங்குகள் நிறைந்த மலைப்பகுதியில் உள்ள வேங்கை மரத்தின் கீழே ஒரு ஆமான் தன் கன்றுடன் வசித்து வருகிறது. அது உறங்கும் சமயத்தை எதிர்பார்த்திருக்கின்ற மந்தி, பால் நிறைந்த அதன் மடியைப் பற்றி அழுத்திப் பொங்கிவரும் பாலைத் தன் குலத் தொழில்கூடக் கல்லாத சிறு குட்டியின் கைநிறையப் பிழிகிறது. மந்தி தாய்மைப் பாசத்தால் கொடிய விலங்குகளையும் அஞ்சாமல் பற்றித்தன் குட்டியின் பசி தணிக்க முயலுகிறது. (நீயும் உன் தலைவிக்காக அரிய சுரவழி சென்று பொருள் தேடி வந்து உனது ஆண்மை அழகை நிலைநிறுத்த வேண்டாவோ) என்று உள்ளுறை அமைத்துப் பேசுகிறாள்.

'' தடங்கோட் டாமான் மடங்கல் மாநிறை
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றங் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலைநாட மருட்கை உடைத்தே
செங்கோல் கொடுங்குரல் சிறுதினை வியன்புனம்
கொய்பதங் குறுகுங் காலையெம்
மையீர் ஓதியெம் மாணலந் தொலைவே''
(நற். 57. பொதும்பில் கிழார்)

இன்னும், விளையாட்டு ஆயமொடு வெண்மணலில் புதைத்த விதை பின்னே முளைத்து மரமாக அதனைத் தன் தங்கையாகப் பாவிக்கும் தலைவியின் நாகரிக உள்ளத்தைப் பாடல் 172-லும்,

" மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்குவெள் ளருவி "

என்று கார்முகில்வண்ணனைக் கரியமலைத் தொடருக்கும், வெண்மைநிறம் படைத்த பலராமனை வெள்ளருவிக்கும் உவமையாக்கிய செய்தியைப்பாடல் 32-லும் பார்க்கலாம்.

" பிடவுங் கொன்றையுங் கோடலும்
மடவ வாகலின் மலர்ந்தன பலவே "

என்ற 99-ஆம் பாடல் 'வம்ப மாரியைக் காரென மதித்து - கல் பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய பருவம் வாரா அளவில் மலர்ந்த தடவுநிலைக் கொன்றை நிச்சயம் மடமை உடையதே' என்ற குறுந்தொகைப் பாடலை எண்ணவைக்கிறது. இன்னும், 'பேரூர் துஞ்சும் யாரும் இல்லை' - (132) என்ற வரி 'நள் ளென்றன்றே யாமம்......நனந்தலை உலகமும் துஞ்சும், ஓர்யான் மன்ற துஞ்சாதேனே' - என்ற வரிகளோடு இணையும். (குறுந்-6)

பாலைபாடிய பெருங்கடுங்கோ, பாலைக் கலியில்,

" வளமையோ வைகலுஞ் செயலாகும் மற்றிவண்
முளைநிரை முறுவலா ராயத்துள் எடுத்தாய்ந்த
இளமையுந் தருவதோ இறந்த பின்னே "

என்ற சுருங்கிய வரிகள் - நற்றிணையில்,

" ....பாழ்நாட்டு அத்தம்
இறந்துசெய் பொருளும் இன்பம் தருமெனின்
இளமையின் சிறந்த வளமையும் இல்லை
இள்மை கழிந்த பின்றை வளமை
காமந் தருதலும் இன்றே "

என விளக்கம் பெறுகிறது. பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்கைப் பொருள்களை ஊன்றிக் கவனித்துப் பாடுவார்கள். இதனை விளக்கும் இடங்கள் :-

" மயிலடி இலைய மாக்குரல் நொச்சி " (115)

" இருப்பைப் பூவின் அன்ன துய்த்தலை இறவு "

(ஒருவகை மீன்) 111. சில நீதிச் செயல்களை ஏற்ற இடத்தில் எடுத்தாள்வர் புலவர் என்பதற்கு,

" நாடி நட்பின் அல்லது
நட்டுநாடார்தம் ஒட்டியோர் திறத்தே " (32)

" தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்
தாமறிந்து உணர்க என்ப மாதோ " (116)

என வருபவை சான்று பகரும்.

இவ்வாறு வரும் அரிய பெரிய கருத்துக்களை நூலின் இடையிடையே நாம் காணலாம்.

அன்பு என்ற அழியாத உணர்ச்சியை விளக்கும் ஆறு நூல்கள் எட்டுத் தொகையுள் அடங்கின. பரிபாடல் ஒழிந்த ஐந்து நூலும் மக்கள் நுதலிய அகன் ஐந்திணை யென்றுளும், திணை யென்ற பெயரால் நிகழும் நூல் இந் நற்றிணையே. நவிலுந்தோறும் நயம் காட்டும் நற்றமிழ்த் தொகுதியே இந்நூல்.

(விரியும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Shiyali.

" Visited the temple on 2—10—66. The temple was kept so scrupulously neat and clean, and so immaculate that it enhanced the spiritual atmosphere of the holy place. The Superintendent was very helpful and ably put the history of the temple in a nut shell that we are leaving the temple spiritually and religiously benefited."

(Sd.) P. C. Ramamoorthy,
Sub Judge, Chidambaram.

2—10—66.

கோபூஜா விதி

சிவதீக்ஷாவான்கள் நித்தியமாகவும் மற்றையர் ஆசாரியரைக் கொண்டு விரும்பிய பேற்றையடையக்கருதி நைமித்திகமாகவும் கோபூஜை செய்யத்தக்கது.

இந்தக் கோபூஜை :

வியாதி அலி கிழம் இல்லாத, மலமருந்தாத, வெளுத்த, பரிசுத்தமான பசுவை அடைந்து ஒருமித்த மனதால் வந்தித்து விநாயகரை வழிபட்டுச் சங்கற்பித்துப் பூஜைக்காக அர்க்கியம் ஸ்தாபித்துச் சடுத்தாஸனம் கற்பித்துப் பூஜித்து,

ஓம் கபிலே நந்தினே நம :
ஓம் கபிலே சுபத்ரே நம :
ஓம் கபிலே சுசிலே நம :
ஓம் கபிலே சுமனஸே நம :

என்று பூஜித்து, தியானம் செய்து,

தியானம் :

பரையதுவே பாற்கடலிற் பசுரூப மாய்த்தேவர்
நிரையாவுந் தனதுருப்பில் நிலவத் தோன்றிக்
கரையிலவே யெனப்பலன்கள் கைவருதற் கெளியதுவாய்த்
தரையதினிற் பலன்யாவுந் தந்தருளுஞ் சொரூபிணியே.

அகில லோகங்களும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நிறைந்துள்ள ஓர் சொரூபமெனத் தியானித்து ஆவாகித்துப் பாத்தியம் அர்க்கியம் ஆசமனந்தந்து அங்கபூஜை செய்க.

அங்கபூஜை :

இருகொம்பின் நடுவில் ஓம் சிவாய நம :
வலக்கொம்பில் ஓம் பிரும்மணே நம :
இடக்கொம்பில் ஓம் விஷ்ணவே நம :

கொம்புநுனியில்	ஓம் அறுபத்தாருயிரங்கோடி தீர்த்தேப்யோநம :
	ஓம் ஸ்தாவரேப்யோ நம :
	ஓம் ஜங்கமேப்யோ நம :
மூக்குநுனியில்	ஓம் ஜ்யேஷ்டாவைய நம :
வலக்கண்ணில்	ஓம் சூர்யாய நம :
இடக்கண்ணில்	ஓம் சந்திராய நம :
பற்களில்	ஓம் மாருதாய நம :
தாடையில்	ஓம் வருணாய நம :
மேலுதட்டில்	ஓம் யக்ஷேப்யோ நம :
கீழுதட்டில்	ஓம் யமாய நம :
கழுத்தில்	ஓம் இந்த்ராய நம :
குளம்பின் நடுவில்	ஓம் கந்தர்வேப்யோ நம :
குளம்பின் நுனியில்	ஓம் நாகேப்யோ நம :
குளம்பின் மேல்பாகம்	ஓம் அப்ஸரேப்யோ நம :
கால்களில்	ஓம் கணேப்யோ நம :
நாடி பத்திலும்	ஓம் நேத்ரேப்யோ நம :
மடியின் அடியில்	ஓம் பிருகுப்யோ நம :
மடியின் நுனியில்	ஓம் சாகரேப்யோ நம :
இருதயத்தில்	ஓம் உமாதேவ்யை நம :
வயிற்றில்	ஓம் பூமிதேவ்யை நம :
வாலாங்கொட்டையில்	ஓம் பர்வதேப்யோ நம :
	ஓம் அரண்யேப்யோ நம :
யோனியில்	ஓம் மகாலக்ஷ்மியை நம :
உரோமங்களில்	ஓம் தேவேப்யோ நம :
கோமயத்தில்	ஓம் பிரும்மணே நம :
கோமூத்ரத்தில்	ஓம் விஷ்ணவே நம :
பசுவின்நெய்யில்	ஓம் ருத்ராய நம :
பசுவின் தயிரில்	ஓம் ஈச்வராய நம :
பசுவின் பாலில்	ஓம் சதாசிவாய நம :

இவ்விதம் பூஜித்துத் தூபதீபங் கொடுத்துக் கப்பி அரிசி தேங்காய் வாழைப்பழம் வெற்றிலைப்பாக்கு நிவேதித்துக் கற்பூர தீபங்காட்டி ஸ்தோத்திரம் ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் செய்து

"துருவருஞ் சுரரு மொத்துச் சார்சுதை கடையும்
அகில லோகங்களி யாவுமாதாரம் பெருகவுன்னி
நகுதேனு வாத்தோன்றி நாயகி யானிடுபுல்லை
வகித்துமென் கோரலியாவும் வழங்குக வருள் சுரந்தே"

இவ்வகை நியாநித்து ஒருபிடி அறுகம்புல்லை வாயில் கொடுக்க. கொடுக்கும்போது

सौरभेयि जगन्मातः देवानाममृतप्रदे ।
गृहाण वरदे ग्रासमीप्सितार्थं च देहि मे ॥
वन्दितासि वसिष्ठेन विश्वामित्रेण जह्नुना ।
कपिले हर मे पापं यन्मया दुष्कृतं कृतम् ॥
गावो ममाग्रतो नित्यं गावः पृष्ठत एव मे ।
गावो मे हृदये चापि गवां मध्ये वसाम्यहम् ॥
एतन्नरो जपेन्मन्त्रं त्रिसन्ध्यं नियतश्शुचिः ।
विमुक्तस्सर्वपापेभ्यः शिवलोकं स गच्छति ॥

"விரதமொரு மண்டலந்தானிய மந்தாங்கி
விரும்பொருளாங் கோபூஜை யியற்றினோர்க்குக்
கரதலாமலகமெனக் கடக்கலா மரிஷ்டங்கள்
காமியஞ் சௌபாக்கியங்கள் சித்தியாவும்
வரமாயு ளாரோக்கிய மகவுப் பேறும்
வாழ்க்கை மடநல்லாரை மணத்தலோடும்
பரமான புண்ணியங்கள் பலவும் நல்கிப்
பரலோகத்திடை யிருத்தல் பாண்மையாமே."

—நீபவனமாகாத்மியம் 10 வது அத்தியாயம்.

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 2 — 25

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயரால் ஆண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A . B. L., அவர்கள்,
"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

(மலர் 25, இதழ் 10, பக்கம் 440 இன் தொடர்ச்சி)

தண்ணரு ளேதைய னுயகி யேயித் தரணியிலே
நண்ணரும் பாவப் பிணியா லனுதினம் நான்புலம்பிக்
கண்ணருள் வேண்டித் துயர்கூறியுநீ கருதுகில்லாய்!
என்னன்னை யேவிட னன்றல வேழைக்கிரங்குவையே. 39

(இ - ள்) தண் அருள் ஏ - தையல்நாயகி ஏ. எண் அன்னை ஏ - குளிர்ந்த கருணை யுருவானவளே ! பாலாம்பிகையே ! அனைவரும் மதிக்கின்ற அம்மையே ! இ தரணியிலே - இந்தப் பூமியின்கண். நண்(ண) அரும்பாவம் பிணியால் - நெருங்கற்கு முடியாத தீவினையாகிய கொடிய நோயினுல். அநுதினம் - நாடோறும். நான்புலம்பி - அடியனேன் ஓலமிட்டு அழுது. கண் அருள் வேண்டி துயர்கூறியும் - தேவரீருடைய கிருபாநோக்கம் (அருட்பார்வையினை) விரும்பித் துன்பங்களையெடுத்துப் பலகால் கூறினுலும். நீ கருதுகில்லாய் - தேவரீர் இதனையொரு பொருட்டாகத் திருவுளம் பற்றவில்லை. விடல் நன்று அல்ல - அடியவனைக் கைவிட்டு விட்லானது நன்மையுடைத்தாகாதே. திருவுளம் இரங்கியருளுக. (எ - று.)

(கு - ரை) தரணி - பூமி. வேண்டல் - விரும்பல். புலம்பல் - வாய்விட்டு அலறல். எண்ணல் - மதித்தல். நன்று - அழகு. நன்மையுமாம். கில் - ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்.

வையத்தி லாருஞ் சினகரத் துட்சென்று வானவரை
யையமி லாமலொருவரம் வேண்டுவ னஃதென்னையேற்
றைய னுமையருள் வேண்டுந் துணைசெயுந் தாழ்வனுமை
யுய்யவேன் பேனுன்மை யாந்தைய னுயக வந்தமியே. 40

(இ - ள்) வையத்தில் - (தேரின்கண்) உலகினிடத்து. ஆரும் - (அமரும்) நிறைவுற்ற. சினகரத்துள் சென்று - கோயிலின்கண் உள்ளே போய். (அண்மையிலிருந்துகொண்டு.) வானவரை - தேவர்களை. ஐயம் இல்லாமல் - சந்தேகம் இன்றி. ஒரு வரம் வேண்டுவன் - ஒரேஒரு வரத்தினை மாத்திரம் விழைந்து பிரார்த்திப்பேன். அஃது என்னையேல் - அதாவது